செ.வெ.எண்: 36 நாள்: 19.01.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.2,88,784 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி அவர்கள் தலைமையில் இன்று (19.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ஓய்வூதியர்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக வரப்பெற்ற 10 மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் 10 மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டது. மேலும் 6 பயனாளிகளுக்கு ரூ.2,88,784 மதிப்பில் ஓய்வூதியர் குடும்பநல பாதுகாப்பு நிதி மற்றும் ஓய்வூதியர் மருத்துவநல நிதிக்கான காசோலைகளை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் ஓய்வூதிய இயக்கக துணை இயக்குநர் (சென்னை) திரு.கி.மதிவாணன், புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலுவலர் திரு.இ.மூக்கையா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) திருமதி.டி.கார்த்தியாயினி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.